**பேருவளை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**
**-----------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**
**-------------------------------**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**
**----------------------------------------------**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**
**---------------------**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேருவளை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**
**-------------------------------------------------------------------------**

**1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**
**-------------------------------------------------------------------------------------------------**

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல 2 இன் படி நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**
**-----------------------------------------------**

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக சபையால் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**
**---------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு பேரேடுகளின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 6,165,640 தொகையான வரவு மீதிகள் இரண்டும் ரூபா 4,261,973 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் இரண்டும் பரீட்சை மீதிக்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அம் மீதிகள் ஐந்தொகையில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகை ரூபா 3,633,975 தொகையால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறைச் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கூட்டுத்தொகையின் வேறுபாடு ரூபா 26,593,379 தொகையான போதிலும் ஐந்தொகையில் இது ரூபா 25,471,756 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டுக் கணக்குகளின் படி, மீளாய்வாண்டின் வருமான விடயங்கள் 3 இன் பட்டியற்படுத்தப்பட்ட வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 10,153,095 தொகையான போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு இப் பெறுமதி ரூபா 10,078,522 ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 74,573 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஐந்து வருமான விடயங்களுக்குரித்தான பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப, இறுதி மீதிகளும் இவற்றிற்குரித்தான ஏனைய சீராக்கங்களும் மேற்கொள்ளப்படாது ரூபா 31,460,755 தொகை வருமானச் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பதிவுகள் சீராக்கப்பட்டதை அடுத்து சரியான வருமானம் ரூபா 38,184,597 தொகையானமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 6,723,842 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவினத்திற்காக ரூபா 3,940,125 தொகை கடன்கொடுத்தோராகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அம் மீதி குறித்த செலவின மீதிகளுக்குக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 13,900 தொகையான அலுவலக உருக்கு அலுமாரி ஒன்றும் ரூபா 8,000 தொகையான எழுதுவதற்கான ஓர் மேசையும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 204,695 தொகையான பதிவுப் பொருட்களின் 21 விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஐ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் 2013 சனவரி 28 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,456 தொகையான கப் வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சம்பள மீளளிப்பு வழங்கப்படுகையில் கப் வண்டியின் கடன் தவணைப்பணமாகக் கழிக்கப்பட்டிருந்த ரூபா 706,273 தொகை மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2014.08.20 ஆம் திகதிய கடித அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் நிலையான சொத்து வட்டியாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 685,300 தொகை வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் வீத வரிகளுக்குரித்தான ஆணைச்சீட்டுக் கட்டணமும் தண்டப்பணமுமான ரூபா 226,501 தொகை வருமானக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டில் ஆண்டிற்கான வீத வரிக் கழிப்பனவுகளான ரூபா 209,167 தொகை செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) இறைச்சிக் கடைக்காக வைக்கப்பட்டிருந்த வைப்புத்தொகையான ரூபா 350,910 ஆண்டின் இறுதியில் உள்ளவாறான இறைச்சிக் கடை வாடகையாக வருமானக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்குரித்தான சீராக்கற் பதிவு வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மீளாய்வாண்டின் போது வீதி செப்பனிடும் ஓர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் தொகையான ரூபா 8,540,000 தொகை கணக்கீடு செய்யப்படுகையில் உள்நாட்டுக் கடனும் மூலதன மானியமுமாக இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(கீ) ரூபா 10,675,000 தொகையான வீதி செப்பனிடும் ஓர் இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்கப்படுகையில் மூலதனச் செலவினத்திற்காக வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கிற்கு ரூபா 2,135,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(கு) மீளாய்வாண்டின் போது மாகாண குறித்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 06 செயற்திட்டங்களுக்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 5,254,074 தொகையும் மூலதன மானியமாக அச் செயற்திட்டங்களால் செலவிடப்பட்ட ரூபா 4,796,980 தொகையும் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கூ) மாகாண குறித்த செயற்திட்டத்தின் கீழ் 3 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 311,197 கூட்டுத்தொகையான தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தப்பட வேண்டிய மீதியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையான ரூபா 25,685 தொகையும் சம்பளமற்ற லீவிற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 449,060 தொகையும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டு மீள அறவிடப்பட்டிருந்த ரூபா 18,000 தொகையும் சம்பளக் கணக்கிற்குச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக செலுத்தப்படாத சம்பள கடன்கொடுத்தோராக பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(கே) முன்னைய ஆண்டின் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,740 தொகையான தொங்கல் கணக்கு செலவு மீதி இனங்காணப்படாது திரண்ட நிதியத்திலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியின் படி, அம் மீதி ரூபா 80,351 தொகையான வரவு மீதியானதுடன் இது ஐந்தொகையில் ரூபா 35,588 தொகையான செலவு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 5,961,076 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,365,490 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,057,067 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 4,076 | 1,883 | 8,902 |
| (ii) | வாடகை | 10,153 | 11,458 | 1,432 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 258 | 259 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | -- | 10,953 | -- |

#### 2.2.2 வீத வரி

2013 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக 2014 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 7,337,531 தொகையானதுடன் அம் மீதியில் ரூபா 10,000 தொகைக்குக் கூடுதலான நிலுவை மீதி காணப்பட்ட ஆதனங்களிலிருந்து ரூபா 1,692,857 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

#### 2.2.3 கடை வாடகை

2012 செப்தெம்பர் 03 ஆம் திகதிய நகர வியாபாரச் சந்தையின் பிற்பகுதியில் 11 மீன்சந்தைகளின் நிலுவையான வருமானத் தொகை பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் 2013 செப்தெம்பர் மாதம் முதல் 2014 யூலை மாதம் வரை அச் சந்தை மீள கேள்விமனுக் கோரப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 159 (ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனுமோர் மத, புண்ணிய, கலாச்சாரச் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு ஆண்டிற்கு ஏற்கப்படும்

செலவினத்தின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 5,000 ஐப் பார்க்கிலும் அதிகரித்திருப்பின் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது பொது நலவாய மாநாடுகளின் கூட்டத்திற்காக நடாத்தப்பட்ட ''சிவ் திகின் ஹரசர'' நிகழ்விற்காக ரூபா 14,100 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு/ முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) 2008 முதல் 2013 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 213,790 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன் 2008 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 104,244 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதியும் காணப்பட்டது.

(ஆ) சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற 92 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 148,099 தொகையான மீதி 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவந்த ரூபா 228,300 தொகையான மின்சாரக் களஞ்சிய மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 குப்பை அகற்றப்படுவதற்கான ஓர் காணியைக் கொள்வனவு செய்தல்

2013 செப்தெம்பர் 25 ஆம் திகதி சபை நிதியத்திலிருந்து ரூபா 2,500,000 செலுத்தப்பட்டு குப்பையை அகற்றுவதற்கும் மீள்சுழற்சி செய்யும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காகவும் பேருவளை ஹலவெலவில் அமைந்துள்ள 100 பேர்ச் அளவிலான ஓர் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 மே 21 ஆம் திகதிய மதிப்பீட்டு திணைக்களத்தால் காணிப் பெறுமதிக்காக சபையால் மதிப்பீட்டறிக்கை ஒன்று கோரப்பட்டிருந்ததுடன் ஒரு பேர்ச் ரூபா 5,000 படி 100 பேர்ச்சிற்காக ரூபா 500,000 தொகையாக மதிப்பீட்டறிக்கை 2013 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இக் காணி உரிமையாளர்களால் பேர்ச் ஒன்று ரூபா 25,000 இற்கு விற்பனை செய்யப்படுவதற்கு விருப்புள்ளதாகவும், உரிமையாளர்களின் அக் கோரிக்கைக்கமைய காணியைக் கொள்வனவு செய்வதற்கு சபையும் ஏக மனதாக தீர்மானித்துள்ளதாகவும் இதனால் அவ் விடயங்களைக் கருத்திற்கொண்டு மதிப்பீட்டு அறிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் சபைச் செயலாளரால் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2013 ஆகஸ்ட் 22 ஆம் திகதி மீள அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) தலைவரால் 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதி காணிக் கொள்வனவிற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) அங்கீகாரம் கோரப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி நிறுவக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான ஆதனமொன்று காணிச் சுவீகரிப்பு ஏற்பாடுகளின் கீழ் கைப்பற்றப்படுவதற்கான இயலுமை இருக்கையில் அரசாங்க மதிப்பீட்டாளரால் தீர்மானிக்கப்படும் விலையைத் தவிர அதனிலும்

அதிகமான தொகைக்கு குறித்த காணி கொள்வனவு செய்யப்படுவதற்கு உடன்பட முடியாதென மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 செப்தெம்பர் 18 ஆம் திகதி பிரதான மதிப்பீட்டாளரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தின் படி, மேற்குறித்த மதிப்பீடு திருத்தப்படுவதற்கு அவசியமற்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) மதிப்பீட்டுத் திணைக்களத்தால் திருத்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிராது, உள்ளூராட்சி ஆணையாளரால் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மேலதிமாக காணியைக் கொள்வனவு செய்வதற்கான உடன்பாடு வழங்கப்பட முடியாதென அறிவிக்கப்பட்டிருக்கையில் ரூபா 2,500,000 தொகை செலுத்தப்பட்டு சபையால் குறித்த காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2014 சனவரி 16 ஆம் திகதி இக் காணியின் சந்தைப் பெறுமதியைக் குறிப்பிட்டு ஓர் அறிக்கையை வழங்குமாறு சபைத் தலைவரால் உள்ளூராட்சி வருமான ஆணையாளர் நாயகத்திற்கு ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

அக் கோரிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக தலைவரால் சபை ஆலோசகரான ஓய்வு பெற்ற ஓர் பொறியியலாளர் 2014 பெப்ரவரி 25 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். அக் கலந்துரையாடலின் போது காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 2,850,000 தொகையெனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் இதன் படி செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணப் பெறுமதியைப் பார்க்க மேலும் ரூபா 14,000 தொகை முத்திரைக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் சபை ஆலோசகரால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இதன் படி, அத் தொகை மாகாண வருமானத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) இதன் படி, ரூபா 500,000 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது ரூபா 2,500,000 இற்கு காணி கொள்வனவு செய்யப்பட்டு, முத்திரைக் கட்டணமாக மேலதிகமாக ரூபா 14,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் காணிக் கொள்வனவிற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமும் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 2,014,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

## 2.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றும் முறையான நடைமுறை சபையால் பின்பற்றப்பட்டிராததுடன் அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பை காணியொன்றிற்குக் கொண்டு செல்லப்பட்டு சமப்படுத்தப்பட்டு அவ்வப்போது மண் நிரப்பப்பட்டிருந்தது. குப்பைகளை சமப்படுத்துவதற்காக சேன் லோடர் ஒன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக விலை கோரல்கள் கோரப்பட்டு மணித்தியாலத்திற்கு ரூபா 2,000 படி செலுத்தும் நிபந்தனையில் ஓர் தனியார் நிறுவகம் 2013 சனவரி 23 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவகத்திடமிருந்து இயந்திரம் பெற்றுக்கொள்ளப்படாது வேறு ஓர் நபரிடமிருந்து அச் சேவை

பெற்றுக்கொள்ளப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது 4 பயணங்களுக்காக ரூபா 264,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலாக குப்பை அகற்றப்பட்ட காணிக்கு நுழையும் வீதி மண் நிரப்பப்பட்டு பதனிடப்படுவதற்கான செலவாக ரூபா 466,575 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.7 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்காக மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 22 செயற்திட்டங்களுக்காக ரூபா 10,778,645 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அச் செயற்திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு